காரணத்தால் மத்திய அரசினுடைய ஆணையின்படி அங்கே ஸ்பெஷல் கோர்ட்டுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நாளைய தினம் அல்லது எதிர்காலத்தில் செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் வழக்குகள் அதிகமாக ஆகுமேயானால்,--தேவையான ஸ்பெஷல் கோர்ட்டுகள் உயர்நீதிமன்றத்தினுடைய ஒப்புதலோடு, நிச்சயமாக அங்கே மட்டுமல்ல, தமிழ்நாட்டிலேயிருக்கிற எல்லாத் தலைநகரங்களிலேயும், தமிழக அரசு நிறுவும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 83, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

83--

வருவாய்க் கிராமங்களின் எல்லைகளை மாற்றியமைத்தல்.

* *11525*-**திரு. ஜெ. பாலகங்காதரன்:**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) வருவாய்க் கிராமங்களின் எல்லைகள் மாற்றி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பொது மக்களுடைய வசதிக்கேற்றவாறும் மற்றும் நிர்வாக வசதிக்கேற்றவாறும் தேவைப்படும் இடங்களில், கிராமங்களைப் பிரிப்பதும், எல்லைகளை அமைப்பதும் நடைபெறும்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலுக்கு நன்றி. இருந்தபோதிலும் எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்த மட்டிலும் அதிக அளவுக்கு வருவாய் கிராமங்கள் ஒவ்வொன்றும் லேப்ஸ் ஆகி, ஒன்றுக்குமேல் ஒன்றாக இன்று அருகருகே இருந்தும் அது மற்ற கிராமங்களோடு சேர்க்கக் கூடிய நிலைமையில் இருந்து வருகிறது. எனவே ஒரு வருவாய்க் கிராமத்தின் மத்தியிலே மற்றொரு வருவாய் கிராமப் பகுதி இருக்கிறது. இதனால் பொது மக்களுக்கு மிகுந்த சிக்கல் ஏற்படுகிறது.

1993 மார்ச் 16]

எனவே அந்த இடங்களை எந்த எந்த இடங்களோடு சேர்ப்பது என்று அரசே முடிவு எடுத்து அவற்றை மாற்றி அமைக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.10

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசே தமிழ்நாடு பூராவும் இருக்கின்ற கிராமங்களில் எங்கெங்கே சிக்கல்கள் இருக்கின்றன என்று ஆராய்வது ஒன்று. மற்றொன்று பொதுமக்களிடமிருந்தோ அல்லது சட்டமன்ற உறுப்பினரிடமிருந்தோ கோரிக்கை வந்தால் அதை நடைமுறைப் படுத்துவது ஒன்று. அரசே எடுக்கின்றபோது ஏறத்தாழ 17,000 கிராமங்கள் இருக்கின்றன. அது காலதாமதம் ஆகப்பெறும். தேவையில்லாத கிராமங்களில் பரிசீலனை செய்யப்படும். அது காலதாமதம் ஆகப்பெறும். வீண் செலவு செய்யப்படும். ஆகையினால் எந்தெந்த கிராமங்களில் சிக்கல்கள் இருக்கின்றன என்று பொது மக்களிடமிருந்து அறிவிப்பு வந்தாலும் வேண்டுகோள் வந்தாலும் அல்லது குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னாலும் முன்னுரிமை கொடுத்து அதற்கு வேண்டிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல, ஒரு சில வருவாய் கிராமங்களில் வருவாய் மிகக் குறைந்த அளவே இருக்கிறது. அதனுடைய பரப்பளவும் மிகக் குறைந்த அளவே இருக்கிறது. அங்கே வேலை பார்க்கும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு வேலை மிக எளிதாக இருக்கிறது. மற்றொரு பகுதியில் பரப்பளவு மிகப் பெரிதாக இருந்தால் அந்த கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு வேலைப் பளு அதிகமாக இருக்கிறது. அப்படிப்பட்ட கிராமங்களை அரசே முன்வந்து பிரிக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி பல்வேறு இடங்கள் இருப்பதை அரசே ஆராய்வதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவிக்கின்ற அதே நேரத்தில், அப்படிப்பட்ட தகவலை சேகரித்து சட்டமன்ற உறுப்பினர் சொன்னால் அதற்கு முன்னுரிமை கொடுத்து உடனடியாகச் செய்வதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஜெ. பரந்தாமன்.

[1993 மார்ச் 16

டாக்டர் ஜெ. பரந்தாமன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வருவாய் கிராமங்களை பிரிக்கும்பொழுது சில கிராமங்களின் பிரிக்கும்பொழுது சில கிராமங்கள் பெயர்கள் இருந்தும் அந்த கிராமங்கள் இல்லை, நான்-எக்ஸிஸ்டென்ஸ் வில்லே ஜ்ஜஸ். அப்படிப்பட்ட கிராமங்களை பட்டியலிலிருந்து நீக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா? அமைச்சர் அவர்கள் இதற்குத் தகுந்த பதில் அளிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெயரே இல்லாத கிராமங்கள் இருக்க முடியாது. சாதாரணமாக உங்களுக்கு எல்லாம் தெரியும். நீங்கள் எந்த கிராமத்தைச் சேர்ந்தவர்களோ அந்த கிராமத்தினுடைய நம்பர் கூட இருக்கும். எந்தெந்த கிராமம் என்றால் - அந்த கிராமம் இருக்கும், அந்த கிராமம் அந்த வட்டத்தில் எத்தனையாவது நம்பர் என்று இருக்கும். 32-வது நம்பர், 40-வது நம்பர் என்று இருக்கும். உதாரணமாகச் சொன்னால் ஒரு கிராமம் 32-வது கிராமம் என்று சொன்னால் அதிலே இரண்டு கிராமம் இருந்தால் அதிலே முதல் பிரிவு கிராமம். இரண்டாவது பிரிவு கிராமம் என்று இருக்கும். ஆகவே பெயர் இல்லாத கிராமம் இருக்காது. நம்பர் இல்லாத கிராமமும் இருக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்திமூர்த்தி: பேரவைத் தலவர் அவர்களே, இந்த வருவாய் கிராமங்களை வகுத்து பல ஆண்டுகள் ஆகின்றன. அந்த கிராமங்கள் ஒரு வட்டத்திற்குள்ளோ அல்லது ஒரு எல்லைக்குள்ளோ அடங்கியதாக இல்லாமல் ஒரு வருவாய் கிராமத்திற்குள் இன்னொறு வருவாய் கிராமம் ஊடுருவிய நிலையிலும் இருக்கின்றது. ஆகவே இதில் மிகுந்த பொருளாதாரச் செலவு இல்லையெனில் அரசே முன்வந்து வருவாய் கிராமங்களைச் சீரமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொருளாதாரத்தைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. பொருளாதாரச் சிக்கல் இல்லையென்றால் என்ற வார்த்தைகளைப் போடவேண்டியதில்லை. பொருளாதாரச் செலவானாலும் பாதகம் இல்லை. மக்களுக்குச் செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. எங்கெங்கே சிக்கல்கள் இருக்கின்றன என்று சொன்னால் உடனடியாக நான் செய்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

1993 மார்ச் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி. ஈஸ்வரமூர்த்தி.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய் குறைவாக மிகவும் பின் தங்கிய பேரூராட்சிகளைக் கொண்ட கிராமங்களை இரண்டு கிராமப் பஞ்சாயத்துக்களாக வருமான அடிப்படையிலே பிரிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வருவாய் அடிப்படையில் கிராமங்களைப் பிரிப்பது உள்ளாட்சித்துறை அமைச்சரிடம் வரவேண்டியது.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாயை நாங்கள் கணக்கிலே எடுத்துக்கொள்கிறோம். பரப்பளவையும் எடுத்துக்கொள்கிறோம். சில இடங்களில் கிராமங்களில் வீடு தெருத்தெருவாக ஒன்றாக இருக்கும். சில இடங்களில் கிராமங்களில் ஒரு தோப்புக்கு ஒரு வீடு இருக்கும். அப்படி இருந்தால் அதனுடைய விஸ்தீரணம் அதிகமாக இருக்கும். நிர்வாக வசதியை விட-நிர்வாக வசதியை மனத்தில் வைத்துக்கொண்டு இந்த அரசு அதை மேற்கொள்ளும் என்பதைவிட--மக்களுடைய வசதியை மனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 84, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

84--

தாரமங்கலம் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தல்.

* *14486*-**திரு. க. அர்ச்சுனன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் விடைகளுக்கு விடையளிப்பாரா-

(அ) தாரமங்கலம் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, மேல் நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?